"கட்சி சார்பற்ற தேர்தல்"

Regd. No. M 6207

824
2-M

CONNEMARA PUBLIC LIBRARY
3 - JAN 1956
MADRAS

கிராமோதயம்

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 ‡ திருப்பூர் - ஜூன் 1 * 1954 * விலை 1 அணா ‡ இதழ் 15

செய்தலும் - செய்யத்தெரிதலும்!!

"If to do were as easy as to know what were good to do, Chapels had been churches, and poor men's cottages princes' palaces; it is a good divine that follows his own instructions, I can easier teach twenty what were good to be done' than to be one of the twenty to follow mine own teaching."

Shakespeare - *"The Merchant of Venice."*

"எது செய்வது நலம் என்று தெரிந்திருப்பது போல், அதை செய்வது சுலபமாயிருந்தால், சிறு மடங்கள் எல்லாம் ஆலயங்களாகவும், ஏழை குடில்கள் யாவும் ராஜவம்சத்தினரின் மாளிகைகளாகவும் இருந்திருக்கும். சொல்வதை செய்யும் பெருந்தகையர் ஒரு சிலரே. நான் இருபது பேர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று கற்றுக் கொடுப்பது சுலபம். ஆனால் நானே அந்த இருபது பேர்களில் ஒருவனாக இருந்து எனது படிப்பினைகளையே கடைப்பிடித்தொழுகுவது அவ்வளவு எளிதல்ல."

பிரபல ஆங்கில நாடகாசிரியர்,
ஸ்ரீ ஷேக்ஸ்பியரின்
"வெனிஸ் வணிகன்."

[சென்னை ஆந்திர அரசாங்கங்களின் ஆரம்பக் கல்வித்திட்டம் சம்பந்தமான கொள்கை மேலே கூறிய "வெனிஸ்வர்த்தகன்" மொழிக்கொத்ததாக இருக்கிறது. நல்லதென்று தெரிந்திருந்தும் நல்லதை அமுல் நடத்த இயலவில்லை!- ஆசிரியர்.]

மன்னியுங்கள்!

"கிராமோதயம்" இந்த இதழ் கையினால் செய்த காகிதத்தில் வெளியிட முடியாமைக்கு வருந்துகிறோம்.

பிரதி மாதமும் சுமார் 12 ரீம் கைக்காகிதம் இருந்தால்தான் "கிராமோதயம்" கைக்காகிதத்தில் வெளியிடமுடியும். இவ்வளவு காகிதமும் எங்கெங்கிருந்தோ வரவழைத்து வெளியிட்டு வந்தோம். தற்சமயம் சுமார் 50 ரீம் காகிதம் ரயிலில் வந்துகொண்டிருக்கிறது. அவை உரிய காலத்தில் வந்து சேராமையால் இந்த இதழ் மில் காகிதத்தில் வெளியிட நிர்ப்பந்தமேற்பட்டதற்காக வாசகர்கள் மன்னிப்பார்களாக,

—ஆசிரியர்,
"கிராமோதயம்."

அடிமை ஆபிரிக்காவில்.

சந்தோஷமான எளிய வாழ்க்கை.

ஆபிரிக்க மக்கள் சொல்லொணா துன்பங்களுக்கும், எண்ணிறந்த அநியாயங்களுக்கும் ஆளாகி வந்துள்ளனர். அவர்களுடைய பண்பாடு ஆத்ம திருப்தியை அடிப்படையாகக்கொண்டது. அவர்கள் பல்லாயிரமாண்டுகளாக மண் சுவர் வைத்த கூரை குடிசைகளில் குடியிருந்துவந்துள்ளனர். அவர்களுடைய விசாலமான தேசத்தில் அவர்கள் இதுவரை கல்லினால் ஒரு வீடோ, கோயிலோ, ராஜமாளிகையோ கட்டவில்லை. அவர்கள் பிறருக்கு கூலி வேலை செய்யவும் தயாராக இருக்கவில்லை.

அடிமைகளாக கொடுமைகளை அனுபவித்தனர்.

ஆனால் வெள்ளையர் அரசாங்கம் அவர்கள்மீது அநியாயமான "தலைவரி" (Polltax) விதித்ததின் பயனாக அவர்கள் வெள்ளை முதலாளிகளின் தோட்டங்களில் கூலி வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இம்மாதிரி அவர்கள் தங்கள் எளிய, திருப்திகரமான வாழ்க்கை முறைகளை கைவிட்டு அன்னிய அதிபர்களின் கூலியாட்களாக வாழநேர்ந்தது.

நற்குணங்கள் நிறைந்தவர்கள்.

இந்த ஆபிரிக்கர்கள், கிறிஸ்துவர்களாயினும் சரி, முகம்மதியர்களாயினும் சரி, அவர்களுடைய புராதன மதங்களையே கடைப்பிடித்தொழுகுபவர்களாயினும் சரி, கண்மூடித்தனமான மதப்பித்து முற்றிலும் இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர். தமது குடும்பத்திலும், சமூகத்திலும் காட்டிவரும் நற்குணங்களைக்கொண்டு அவர்களை மதிப்பிடுங்கள்; தமக்காக அவர்கள் தயாரித்துள்ள அழகான எளிய ஆடைகளைக்கொண்டு அவர்களை மதியுங்கள். அவர்களுடைய ஆத்மீக சங்கீதம், அழகிய ஆடல் பாடல்கள், புராதனமாயினும், ஜீவனுள்ள கலைகளைக்கொண்டு அவர்களை மதிப்பிடுங்கள். அவர்களை முதலில் அன்புடன் அணுகக்கற்றுக்கொள்வோம். எந்த இனத்தவருக்கும் உயர்ந்த குணங்களுக்கு ஏகபோக உரிமை கிடையாது!

புதிய சமுதாயத்தையும் உருவாக்கக்கூடியவர்கள்.

அவர்களுக்கு சந்தர்ப்பமளித்தால் இந்த ஆபிரிக்க ஜாதியினர் உலகில் பல இனத்தவர்களையும், பண்பாடுகளையும் ஒன்று சேர்த்து, புதிதாக ஒரு கலாசாரத்தையும், சமூகத்தையும் உருவாக்க உதவுவார்கள்.

இந்தியாவில் பல பல்கலைக்கழகங்களிலும் தற்சமயம் பயின்றுவரும் ஆபிரிக்க மாணவர்கள், திறம்பட முயன்று வருகின்றனர்.

* * * * *

ஒரு ஆபிரிக்க தலைவன்.

ஒரு நாள் நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு சமீபத்தில் நடந்துவந்த ஒரு சமூக சேவை கேந்திரத்தை பார்வையிடச்சென்றோம். அங்கு வசித்து வந்த ஆபிரிக்க ஜாதியினரின் தலைவன் பெட்ரோ என்று அழைக்கப்பட்டுவந்தான். அவருடைய விருந்தினராக, ஒரு ஆபிரிக்க குடும்பம் எப்படி வாழ்க்கை நடத்துகிறதென்பதை, நாங்கள் பார்க்க

(தொடர்ச்சி 68-ம் பக்கம் பார்க்க)

3 JAN 1956

கிராமோதயம்

ஜூன் 1 1954

கட்சி சார்பற்ற தேர்தல்.

தேர்தல்களில் மோகம்.

தேர்தலில் ஜனங்களுக்கு அதிகம் ஆர்வம் காணப்படுகிறதென்று பி. சோ. கட்சியின் தலைவர் கூறினர். பூமிதான வேலை ஒரு அவசியமான வேலை என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிருர்கள். ஆனல் வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் தேர்தலில் காட்டுவதைப்போன்ற ஆர்வத்தை இதில் காட்டுவதில்லை. சிலர் பூமிதான வேலை மூலம் பொதுஜன தொடர்பை அதிகரித்துக்கொண்டு அதனல் தேர்தலில் பலன் கிடைக்கும்படி செய்து கொள்ளலாம் என்று எண்ணுகிருர்கள். ஏதாவது ஒரு நல்ல வேலை நல்ல நோக்கத்துடன் செய்யப்படுமானல் அது தவருகாது. இம்மாதிரி பூமிதான வேலையினல் மற்ற அனுகூலங்களும் கிடைக்கக்கூடும்.

ஜனசக்தி

தேர்தலில் அதிகமான சக்தியிருக்கிறதென்று ஜனங்களுக்குத் தோன்றுகிறது. ஆனல் அதைக் காட்டிலும் அதிகமான சக்தி அஹிம்சா ஜன சக்தியைத் தோற்றுவித்தாலிருக்கிறது என்பது தெரியவரும்பொழுது அவர்கள் சிந்தனை செய்யக் கூடிய முறையே மாறிவிடும். ஆனல் தேர்தலில் அதிகமான சக்தியிருக்கிறதென்று இன்று அவர்களுக்குத் தோன்றுகிறது. இதைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டியது அவசியமாகும்.

தேர்தல் முறைகளில் காலதேசத்திற்கேற்ற மாறுதல்கள்.

மேனாடுகளிலிருந்து நம்நாட்டிற்கு வந்த தேர்தல் முறையானது சில வருடங்களுக்கு மட்டும் இருக்கக் கூடியதில்லை நீண்டகாலம்வரை நிலைத்திருக்கக்கூடும். அந்நிய தேசங்களிலுள்ள இந்த தேர்தல் முறையை பின்பற்றுவது கெட்டதல்ல. ஆனல் அதில் நம்முடைய தேசத்தினுடைய சூழ்நிலைக்கு அனுகூலமான மாறுதல்களை செய்யவேண்டும்.

ஜாதிபேதம் குறுகிறது.

இங்குள்ள சமூகம் ஜாதிவேறுபாடுகள் நிறைந்தது. ராஜாராம் மோகன்ராய் காலத்திலிருந்து மஹாத்மா காந்திஜிவரையில் தோன்றிய சிந்தனசில மஹா புருஷர்களனைவரும் ஜாதிவேறுபாட்டை எதிர்த்து போராடிவந்திருக்கிருர்கள். அதனல் ஜாதீய ஸ்தாபனங்கள் தளர்வடைந்தன. ஆனல் தற்சமயம் ஜாதீய ஸ்தாபனங்கள் அதிக பலமடைந்து வருவதாகக் காணப்படுகிறது. இது ஏன்? தேர்தலில் ஜாதிவேறுபாட்டைப்பற்றிய எண்ணம் வருகிறது. அதனல் ஜாதி வேறுபாட்டுக்கு பலம் கிடைக்கிறது. இதுவே காரணமாகும்.

துவேஷத்தை வளர்க்கிறது.

பரஸ்பர துவேஷத்தை வளர்ப்பதும், பணம், நேரம் இரண்டையும் வீணக்குவதும் தேர்தலிலுள்ள மற்ற குறைகளாகும். தேர்தலுக்கு இன்று மிதமிஞ்சிய மகத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதாவதொன்றுக்கு மகத்துவமிருந்தபோதிலும், அதற்கு அளவிற்கதிகமான மகத்துவம் கொடுக்கப்பட்டால் மனித சமூகம் தவருன வழியில் சென்றுவிடுகிறது.

சுதந்திரமடைவதற்கு முன்பு அரசியலில் இருந்த சக்தியை சுதந்திரமடைந்த பிறகு சமுதாய வேலையிலும், பொருளாதார அபிவிருத்தி வேலையிலும் ஈடுபடுத்தல்வேண்டும் என்ற விஷயம் அரசியல் ஊழியர்களுக்குப் புரியவில்லை.

பொதுஜன சேவைகளில் அரசியல் மோதல்கள் கூடாது.

இதை நோக்கமாகக்கொண்டு இன்றைய தேர்தல் முறையில் என்ன மாறுதல் செய்யவேண்டும் என்பதை சிறிது ஆலோசனை செய்வோம். இதுவரையில் நடைபெற்ற தவறுதல்கள் இனிமேல் நடைபெருத வழியைக் கண்டுபிடிக்கவேண்டும். இதற்கு அதிகமாக சிந்தனை செய்யவேண்டும் என்று நான் அநேக முறை சிந்தித்தும், சொல்லியுமிருக்கிறேன். தேர்தலின் எல்லை வரையறுக்கப்படவேண்டும் என்பது முதலாவது விஷயம். பொதுஜனசேவை செய்வதற்கான பொறுப்புள்ள இடங்களில் அரசியல் கட்சிகளின் தலையீடு இருக்கக்கூடாது. முனிசிபாலிடி, லோகல்போர்டுபோன்றவைகளுக்கு கட்சிகளின் சார்பில் போட்டியிடக்கூடாது. இதைப்பற்றி ஜனங்கள் சிந்தனை செய்வார்களானல், இதனல் அதிக நன்மையுண்டாகும் என்பது அவர்களுக்குப்புரியும். முனிசிபாலிடி, லோகல் போர்டு, கிராமப் பஞ்சாயத்து முதலியவற்றில் ஜனசேவைக்கான வேலைகள் நடைபெறுகின்றன. இதில் வெவ்வேறுவிதமான அரசியல் வாதங்களின் சம்பந்தம் வரக்கூடாது.

இந்தியாவைப் போன்ற விசாலமானதும், பின்னடைந்ததுமான தேசத்தில் இந்த நோக்கம் இருக்கவேண்டும். இங்குள்ள வாழ்க்கைத் தரம் குறைந்திருக்கிறது, கல்வி இல்லை என்பதற்காகத்தான் பின்னடைந்த தேசம் என்று கூறினேன். இம்மாதிரியான சூழ்நிலையில் வெவ்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு பொதுவான வேலைத்திட்டம் கிடைக்கவேண்டும். அதில் அனைவரும் தீவிரமாக ஈடுபடவேண்டும், அவர்கள் தங்கள் தங்கள் அரசியல் வாதம், கருத்து, தத்துவம் முதலியவற்றை விட்டுவிடவேண்டுமென்று நான் கூறவில்லை. கருத்துக்களை அலசி ஆராய்வது அவசியம். ஆனல் நடைமுறையில் மோதுதல் கூடாது என்று நான் விரும்புகிறேன்.

பொதுஜனசேவைக்கு ஒரு பொது திட்டம் தேவை.

மக்களின் நன்மையை விரும்புகிறவர்களும், ஜனநாயகத்தை ஒப்புக்கொள்ளுபவர்களும், அமைதியைப்பற்றி பேசுபவர்களுமான வெவ்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் அனைவரும் சமமாக ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு சமுதாய வேலைத்திட்டத்தை தேர்ந்தெடுக்கவேண்டும். யாராவது ஒருவர் இம்மாதிரி ஒருவித வேலைத்திட்டமும் கிடைக்கவில்லையென்று சொன்னல், இவர்கள் அனைவரும் துர்ஜனங்களின் கூட்டமென்று சொல்லவேண்டியிருக்கும். இவர்கள் அனைவரும் துர்ஜனங்கள் அல்ல. நல்லவர்கள் என்று நான் கருதுகிறேன். நல்லவர்களிடத்தில் இம்மாதிரி ஒரு சமமான வேலைத்திட்டம் இருக்கும்போதுதான் நல்லவர்கள் என்று சொல்லிக்கொள்ளமுடியும். ஆகையால் அனைவரும் சமமாக கடைப்பிடித்து ஒழுகக்கூடிய ஒரு வேலைத்திட்டம் கிடைக்கவேண்டும். இம்மாதிரியான ஒரு ஏற்பாடு நடைபெறுமானல் இன்று நடைபெறக்கூடிய மோதல்கள் ஏற்படா. வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மற்றவரை கண்டனம் செய்துகொண்டிருந்தால் மக்களின் சிரத்தை ஸ்திரமாக இருக்காது.

அரசியல் கட்சி சார்பற்ற தேர்தல்.

முனிசிபாலிடி, லோகல் போர்டு, பள்ளிக்கூடங்கள், சர்வகலா சாலைகள் முதலியவற்றில் அரசியல் கட்சி பேதம் வரக்கூடாது. அங்கு அரசியல் விவாதம் நன்றாக நடக்கட்டும். ஆனால் சர்வகலாசாலைகள், பாடசாலை முதலியவற்றின் ஏற்பாடுகள் திட்டம் ஆகியவை அனைவரின் ஏகோபித்த கருத்தினால் நடைபெறவேண்டும். அங்கு அரசியல் கட்சி இருக்கக்கூடாது. ஜனங்களுக்கு இந்தக் கருத்து பிடித்தமானால் இம்மாதிரி சட்டமும் இயற்றக்கூடும். இம்மாதிரியான ஸ்தாபனங்களின் தேர்தலுக்கு நிற்பவர் ஊழியர் என்ற முறையில் நிற்பார். ஜனங்கள் நல்ல ஊழியர் என்று கருதித்தான் அவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். இம்மாதிரி தேர்தல்களினால் கெடுதல்களிலிருந்து நாம் விலக முடியும்.

தாரதம்ய சக்தியும்-முதன்மை பின்மை போட்டிகளும்.

நாம் சிறிது தாரதம்யத்தையும், விவேகத்தையும் கற்றுக்கொள்ளவேண்டும். எதற்கு எவ்வளவு மதிப்பு கொடுக்கவேண்டும் என்பது மக்களுக்குத் தெரியவேண்டும். இதனால் தேர்தலில் ஜனங்களுக்கு இன்றிருக்கக்கூடிய ஆர்வம் இருக்காது. சமுதாய வேலைகளிலும், ஜன சக்திக்கான வேலைகளிலும் ஜனங்களுக்கு அதிக ஆர்வம் இருக்கும். இன்று இந்தியாவில் மதிப்பு, அளவு இல்லாமலேயே வேலைகள் நடைபெறுகின்றன. எதற்கு எவ்வளவு மதிப்பு கொடுக்கவேண்டும் என்ற விஷயம் நமக்குத் தெரிவதில்லை. ஆனால் இதைப்பற்றிய அறிவு கிடைத்துவிடுமானால் பூதானத்தின் மகத்துவம் அனைவருக்கும் தெரிந்துவிடும். அனைவரும் இதில் ஈடுபட்டுவிடுவார்கள், அதனால் பலமும் உண்டாகும்.

அனைவரும் சங்கற்பம் செய்தால் மூன்று நான்கு வருடங்களில் இவ்வேலை முடிந்துவிடும். எதற்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கவேண்டும் என்ற அறிவு ஜனங்களுக்கு உண்டாகும்போது தான் இந்த சங்கற்பம் நடைபெறும்!!

கயா.
31-3-'54 — **வினோபா**

வாகைத்தாவூரில் கிராம சேவை

வாகைத்தாவூர்

கோவில்பட்டிக்கு சுமார் 10 மைல் தூரத்தில் வாகைத்தாவூர் என்ற ஒரு சிறிய கிராமம் இருக்கிறது. இங்கு சென்ற சில மாதங்களாக ஒரு கிராமோதய கதர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு வேலை செய்து வருகிறது. தற்சமயம் நூற்பு மட்டும்தான் நடைபெற்றுவருகிறது. கூடிய வரையில் கிராமவாசிகளுக்கு நெசவுப் பயிற்சியளிக்க ஒரு நெசவு வகுப்பு இங்கு ஆரம்பமாகும். பயிற்சிக்கு அவசியமான கட்டிடம் தயாரிப்பதில் தற்சமயம் சங்கத்தார் முனைந்திருக்கிறார்கள்.

ஸ்ரீனிவாசன் தம்பதிகள்

சென்ற ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் இருந்து இந்த ஊரை கேந்திரமாகக்கொண்டு அகில பாரத சர்வ சேவா சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாசனும் அவருடைய மனைவியார் ஸ்ரீமதி கமலா ஸ்ரீனிவாசனும் காந்தீயக் கருத்துக்கிணங்க கிராம சேவை செய்து வருகிறார்கள். இவ்வூரைச் சுற்றியுள்ள ஐந்து மைல் சுற்றளவுக்குட்பட்ட எல்லாகிராமங்களிலும் நமது சர்வோதய திட்டப்படி வேலை நடக்கச் செய்யவேண்டுமென்பதே அவர்கள் குறிக்கோள். முதல் முதலாக அவர்கள் தங்கியிருக்கும் வாகைத்தாவூரில் ஒவ்வொரு வீட்டிலும் ராட்டை சுழலவேண்டும், எல்லோரும் கதர் சுயதேவைப் பூர்த்தியாளராக வேண்டும், கிராம தேவைக்கான எண்ணெய் அங்கேயே நாட்டுச் செக்கு மூலம் தயாரிக்கப்படவேண்டும், கிராமப் பள்ளியை ஆதாரப் பள்ளியாக மாற்றவேண்டும், இரவில் முதியோர்களுக்கும், பெண்களுக்கும் வகுப்பு நடத்துதல் ஆகிய வேலைகளை எடுத்துக்கொண்டு செய்து வருகிறார்கள். இரவில் முதியோர் கல்வி வகுப்பிற்குத் திரளாக கிராம ஆண்களும், பெண்களும் வருவது குறிப்பிடத்தக்கது.

தினசரி பிரார்த்தனை

இவர்கள் தினந்தோறும் இரண்டு வேளையும் பிரார்த்தனை நடத்துகிறார்கள். மாலைப் பிரார்த்தனைக்குப் பெருவாரியான கிராமவாசிகள் வருகிறார்கள். அவர்கள் ஒழுங்காகவும், வரிசையாகவும் உட்கார்ந்துகொண்டு பிரார்த்தனை செய்வது மிகவும் போற்றத்தக்க விஷயம். பிரார்த்தனைக்குப் பிறகு கிராம முன்னேற்றத்திற்கான சர்ச்சைகள் நடத்தப்படுகின்றன.

சென்ற மாதம் கிராமப் பொதுக் கிணற்றை கிராமவாசிகளின் "உழைப்பு தானத்"தின் மூலம், துப்புறவு செய்து சீர்திருத்தியது ஒரு குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

இந்த எல்லா வேலைத்திட்டங்களிலும் கிராமோதயக் கதர் சங்கத்தார் முழுமனதுடன் ஈடுபடுகிறார்கள்.

— **என். எஸ். சுப்பிரமணியம்**

கிராமோதய கதர் சங்கங்களில் நெசவு

எல்லா கிராமோதய கதர் சங்கங்களிலும் நூல் நூற்கப்பட்டு வருகிறது. ஆனால் பெரும்பாலான சங்கங்களின் நூல் சர்வ சேவா சங்கத்தின் மூலம் தான் நெய்விக்கப்படுகிறது. எல்லா சங்கங்களிலும் அங்கு தயாராகும் நூல் அவர்களாலேயே நெய்யப்பட்டால்தான் உண்மையான கிராம சுயதேவைப் பூர்த்தி சாத்தியமாகும். சென்ற வருஷத்தில் சில சங்கங்களின் சார்பில் நெசவுக்காரர்களை கிராமத்தில் குடியேற்றி அந்த சங்கத்தில் நூலை நெய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சாத்தியமான ஊர்களில் இந்த முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக நெசவுக்காரர்கள் தனியாக வர விரும்புவதில்லை. நான்கு அல்லது ஐந்து குடும்பமாகக் குடியேற்றினால்தான் இது சுலபமாகிறது.

இதற்காக பரம்பரை நெசவுக்காரர்களையே நம்பி இராமல் நூற்கும் குடும்பங்களிலேயே, கிராமவாசிகளிலேயே உற்சாகமான இளைஞர்களுக்கும் நெசவு கற்பிப்பது என்ற முறையை திருப்பூர் வட்டகையில் சில இடங்களில் கையாண்டு நல்ல பலனை அளித்திருக்கிறது. இம்முறையை கிராமோதய காதி சங்கங்களும் அமுல் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. கிராமோதய சங்கத்தின் சார்பில் நெசவுப் பயிற்சிக்கூடங்கள் நடத்தவும், ஆசிரியர்கள் தங்கவும் போதிய இடமளித்தால் அவ்விடங்களில் நெசவுப் பயிற்சிக்கூடங்கள் ஆரம்பிக்கப்படும். ஒவ்வொரு பயிற்சிக்கூடமும் 5 தறிகள் கொண்டதாக இருக்கும். ஒரு தடவையில் 10 பேர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். 6 மாத காலத்தில் ஒரு பிரிவினர் பயிற்சி பெறுவர். அவர்கள் அதே கிராமவாசியாக இருப்பார்கள். ஆதலால் தங்களுடைய வீட்டிலேயே தறிகள் அமைத்து நெய்யத் தொடங்கிவிடுவார்கள்.

பயிற்சி காலத்தில் அவர்கள் நெய்யக்கூடிய அளவுக்கு நெசவுக் கூலியும், பத்து கெஜம் கொண்ட பீஸ் ஒன்றுக்கு குறிப்பிட்ட அளவு உபகாரச் சம்பளமும் கொடுக்கப்படும். பயிற்சி முடிந்த பிறகு அந்தந்தத் தறிகளை யெல்லாம் சம்பந்தப் பட்ட கிராமோதய சங்கத்திற்கே கொடுக்கப்பட்டு அதனுடைய கிரயத்தை சௌகரியமான பகுதிகளாக வசூலிக்கப்படும்.

இவ்விதமாக கோயில்பட்டி பிர்க்காவைச் சேர்ந்த சங்கரபாண்டியபுரம், குரிஞ்சாகுளம் ஆகிய இரண்டு கிராமங்களில் கிராமோதய காதி சங்கத்தின் சார்பில் இந்த மாதம் நெசவுப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 4, 5 சங்கங்களிலும் கூடிய வரையில் பயிற்சி துவக்கப்படும்.

— அ. நடராஜன்

நொச்சிப்பாளையம் கிராமோதய கதர் சங்கம் ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கிறது.

சென்ற ஏப்ரல் 14-ந் தேதி வெள்ளிக்கிழமையன்று தாராபுரம் தாலூக்காவில் நொச்சிபாளையம் கிராமத்தில் அந்த ஊர் கிராமோதய கதர் சங்கத்தின் சார்பில் ஒரு ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது, அந்த பாடசாலைக்கு ஆசிரியராக செங்காட்டூர் கிராமோதய கதர் சங்கக் காரியதரிசி ஸ்ரீ ஏ. எம். சுப்பைய வாத்தியாரை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளது. ஷை பள்ளிக்கூடத்தைக் காலக்கிரமத்தில் காந்தியடிகளின் ஆதாரக் கல்வித் திட்டப்படி நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

உடனடியாக பள்ளியில் நூற்றல் வகுப்பு ஏற்படுத்துவதென்றும், ஷை நூற்பு மூலம் கிடைக்கும் வருவாயைக்கொண்டு பாடசாலை நிர்வாகத்தை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நொச்சிபாளையம்,
7-5-54. ஸ்ரீ முத்துசாமிக் கவுண்டர்.

வேப்பங்கொட்டை வாங்குதல்.

நமது தேசத்தில் தற்சமயம் உற்பத்தியாகும் உணவுக்கு லாயக்கான தாவர எண்ணைகள் மக்கள் ஆரோக்கியத்திற்கு அவசியமான அளவில் நாலில் ஒரு பங்குதான் ஆகிறது. இதிலிருந்து பெரும்பகுதி தற்சமயம் வனஸ்பதி தயாரிப்பதற்கும் சோப் தயாரிப்பதற்கும் சென்றுவிடுகிறபடியால் சராசரி மனிதனுக்குத் தேவையான எண்ணையளவில் மிகவும் சொற்பமாகவே உணவுக்காக கிடைக்கிறது. தேசத்தில் ஆரோக்கிய நிலையை அபிவிருத்தி செய்வதற்கு சாத்தியமானவகைகளில் எல்லாம் தாவர எண்ணைகளை உணவுக்காகவே ஒதுக்கிவிட்டு சோப் தயாரிப்பதற்கும், மற்றும் வேலைகளுக்காக உணவுக்கு லாயக்கல்லாத வேப்பெண்ணை, காட்டாமணக்கெண்ணை போன்றவைகளை சேகரித்து சோப் முதலியன தயாரிப்பதென்றும் அகில இந்திய கதர் கிராம கைத்தொழில் போர்டு தீர்மானித்திருக்கிறது.

மேற்படி தீர்மானத்திற்கிணங்க அடுத்துவரும் ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் சர்வ சேவா சங்கத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கிராமோதய கதர் சங்கங்கள் மூலமாக சுத்தமான வேப்பங்கொட்டையை சேகரித்து ஆங்காங்கு சில கிராமோதய கதர் சங்கங்களிலேயே புதிய சீர்திருத்திய செக்குகள் அமைத்து அவை மூலம் எண்ணை ஆட்டி அதை சோப் தயாரிப்பதென்று தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

கிராமோதய கதர் சங்கங்கள் நல்ல சுத்தமான விளைந்த வேப்பங் கொட்டையை படிக்கு ரூ. 0–0–9 வீதம் கொள்முதல் செய்யலாம். ஷை கொட்டையையோ, அல்லது அதிலிருந்து எடுக்கப்படும் எண்ணையையோ, சர்வ சேவா சங்கமோ, அகில இந்திய கதர், கிராம கைத்தொழில் போர்டோ வாங்கிக்கொள்ளும்.

—ப. கோவிந்தசாமி.

(65-ம் பக்கத் தொடர்ச்சி) அடிமை ஆப்பிரிக்காவில்

முடிந்தது. அவருடைய அழகிய புதிய கட்டிடத்திற்கு பின்னால் வட்டவடிவமாக அமைந்த அநேக ஆபிரிக்க குடிசைகள் இருந்தன.

ஆடுமாடுகளும், மனிதர்களும் சரிநிகர் சமானமான வாழ்க்கை.

இங்கு முற்றிலும் காற்றோட்டமோ, வெளிச்சமோ இல்லாத இருளடைந்த அறைகளில் ஆடுமாடுகளும், மனிதர்களும் சரிநிகர் சமானமாக வாழ்வதைக்கண்டேன். இதேமாதிரி நம் தேசத்தில் இமயத்தின் சாரல்களில் வாழ்ந்துவரும் மலை ஜாதியினர் ஞாபகம்தான் வந்தது.

பசுவின் பாலையும், இரத்தத்தையும் குடிப்பார்கள்.

ஆபிரிக்க ஜாதியினர் பசுவின் பாலையும், அதன் ரத்தத்தையும் அருந்துகிறார்கள். கன்று அல்லது ஒரு பசுவை ஒரு மரத்துடன் கட்டி, அதன் ஒரு குறிப்பிட்ட ரத்த நாடியை ஒரு அம்பு அல்லது கத்தியால் வெட்டப்படுகின்ற விதம்; அதிலிருந்து தேவையான ரத்தம் கிடைத்த உடன் எப்படி ரத்தம் சேதமடையாமல் ஓட்டம் நிறுத்தப் படுகிறது; பிறகு எவ்வாறு அந்த ரணத்தை ஆறச் செய்கிறார்கள் என்று விரிவாக விளக்கினார்கள். இந்த கொடுமையை நான் என் கண்ணால் காண தைரியமடையவில்லை. என்னுடன் இருந்த நண்பர்கள் கண்டதை நான் கேட்டறியவும் இல்லை!!

— காகா கலேல்கர்

(From "Our Next Shore Neighbours")

இந்த இதழில்

"செய்தலும் – செய்யத் தெரிதலும்"	65
"மன்னியுங்கள்"	65
அடிமை ஆபிரிக்காவில்	65
கட்சி சார்பற்ற தேர்தல்	66
வாகைத்தாவூரில் கிராம சேவை	67
கிராமோதய கதர் சங்கங்களில் நெசவு	67
நொச்சிபாளையம் கிராமோதய கதர் சங்கத்தின் சார்பில் ஆரம்ப பாடசாலை ஆரம்பம்	68
வேப்பங்கொட்டை வாங்குதல்	68

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0–1–0 வருட சந்தா ரூ. 1–8–0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.